டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 23.06.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 005 - Madurai | Online Edition

# தமிழகத்தில் மழைக்கான வாய்ப்பு!

சென்னை, ஜூன் 22

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

இன்று (ஜூன் 23) தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதி களிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக் கூடும்.

இன்று முதல் 26.6.26 வரையில் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத் தக்க மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது.



# விளைச்சல் அதிகரித்து அதிக வருமானம் பெற நானோ உரங்களை பயன்படுத்தலாம்



பெரம்பலூர், ஜூன் 22

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களில் நல்ல விளைச்சலைப் பெற அதிகளவு ரசாயன உரங்களையே பயன்படுத்தி வருகின் றனர். அதிலும் யூரியா மற்றும் டிஏபி பயன் பாடு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. யூரியாவை அதிக அளவு பயன்படுத்தும் போது விரைவாக, மண் வளத்தை பாதிக்கும் என்பது மறுக்கப்படாத உண்மை. விவசாயிகள் எப்பொழுதும் ஒருங்கிணைந்த சமச்சீர் வகையில், அனைத்து வகையான இயற்கை உரங்கள், அனைத்து வகையான உயிர் உரங்கள், பயிர்களுக்கு தேவையான அனைத்து பயிர்களுக்கும் நுண்ணூட்டச் சத்து உரங்கள் மற்றும் மண் ஆய்வின்படி செயற்கை உரங்களை இடவேண்டும். மானிய விலையில் உள்ள அனைத்து உரங்களுமே மிக அதிகளவில் ஏற்றப்பட்டுள்ளதால், விவசாயிகள் நானோ உரங்களை பயன்படுத்துவதால் உரம் செலவை குறைத்து, மண் வளத்தை காத்து அதிக வருமானம் பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு டாக்டர் அக்ரி ராதாகிருஷ்ணன் கூறினார்.

நானோ உரங்களாக நானோ யூரியா, நானோ டிஏபி, நானோ ஜிங்க், நானோ காப்பர் போன்ற உரங்கள் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும், தனியார் உர விற்பனை நிலையங்களும் விற்பனைக்கு உள்ளது. இவற்றை நாம் பயன்படுத்தும் போது உர திற்கான செலவு குறைவுடன் அதிக விளைச்சல் பெற்று அதிக வருமானம் பெறலாம். நானோ திரவ உரங்கள் மிகச் சிறிய துகள்களாக 20 முதல் 100 நானோ மீட்டர் மற்றும் அதிக மேற்பரப்பு அளவு கொண்டுள்ளதால், இலை வழியாக தெளிக்கும்போது, இலையில் உள்ள துவாரங்கள் மற்றும் பிற திறப்புகள் மூலம் எளிதில் ஊடுருவிச் சென்று தாவரங்களுக்கு தேவையான சத்துக்களை வழங்குகிறது. நானோ யூரியா திரவ உரத்தை குருணை உரியுடன் ஒப்பிடுகையில் 55,000 நானோ துகள்கள் ஒரு குருணைக்கு சமமானது. அதேபோல் 10000 மடங்கு அதிக பரப்பளவியம் கொண்டுள்ளது. நானோ உரங்களின் பயன்பாடு திறன் குருணை உரங்களை விட 80 – 90 சதவீதத்திற்கு

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மேலாக உள்ளது என பல்வேறு வேளாண் பல்கலைக்கழக மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்டு தெரிவிக்கப் பட்டுள்ளது. நானோ யூரியா (பிளஸ் 20 சதவீதம்), தழைச்சத்து பயன்படுத்துவதன் மூலம் குருணை யூரியா தேவையை 50% குறைக்கலாம். இந்த திரவ உரமானது அனைத்து பயிர்களுக்கும் தேவையான தழைச்சத்தை கொண்டுள்ளதால், பயிர்களில் ஏற்படும் தழைச்சத்து குறைபாடுகளை சரி செய்ய உதவுகிறது. பயிர்களை தட்ப வெப்பநிலையை தாங்கும் தன்மை சீர் செய்து மகசூலை அதிகரிக்கிறது. நுண்ணூட்ட சத்துக்களின் செயல் திறன் மற்றும் பயிரில் உள்ள சத்துக்களை உறிஞ்சும் தன்மையும் அதிகரிக்கிறது. 5 மில்லி நானோ யூரியாவை ஒரு லிட்டர் நீரில் கலந்து முக்கிய வளர்ச்சி பருவங்களான, களைப்பு அல்லது தூர் விடுதல் தருவாயில் முதல் தெளிவாகவும், பூக்கும் பருவத்திற்கு முன் இரண்டாம் தெளி வாகவும், பயன்படுத்தலாம். நானோ டிஏபி (8 சதவீத தழைச்சத்து 16 சதவீதம் மணிசத்து). திரவ உரமானது அனைத்து பயிர்களுக்கும் தேவையான தழைச்சத்து மற்றும் மணிசத்தை கொண்டுள்ளதால், பயிர்களில் ஏற்படும் தலை சத்து மற்றும் மணி சத்து குறைபாடு களை சரி செய்ய உதவுகிறது. இதை விதை நேர்த்தி, செய்கையில் விதைகளின் முளைப்பு, திறன் மற்றும் வீரிய தன்மையை அதிகரிக் கிறது. யூரியா மற்றும் டிஏபி உரங்களின் விலைகளை விட நானோ யூரியா நானோ டிஏபி இவைகளின் விலைகள் மிக மிக குறைவு. அது மட்டுமல்லாமல் மண்ணின் வளத்தை காத்து அதிக விளைச் சல் பெற வாய்ப்புள்ளது. நானோ யூரியா நானோ டிஏபி திரவ உரங்களை 500 மில்லி ஒரு ஏக்கர் பயிருக்கு பயன்படுத்தலாம். நானோ ஜிங்க் (10000 பிபிஎம்) பயன்படுத்தப்படுவதால், துத்தநாக சத்தை குறைபாட்டை சரி செய்கிறது. வேர் மட்டும் தண்டின் வளர்ச் சியை ஊக்குவிக்கிறது. விதை வளர்ச்சி மற்றும் மகரந்த சேர்க் கையை மேம்படுத்துகிறது. ஒளிச்சேர்க்கை பெற, ஊட்டச்சத்து உறிஞ்சிதலை அதிகரிக்கிறது .தாவர வளர்ச்சி ஹேர்மோன்களை சீராக்குகிறது. அதேபோல் நானோ காப்பர் (8000 ppm) பயன் படுத்து குவதால் தாவர அமைப்பு மற்றும் குளோரோபில் உற்பத் தியில் உதவுகிறது. இலைகள் பழுப்படையாமல் பயிர் வளர்ச்சியை அதிகரிக்கிறது .விதை உருவாக்குவதை உறுதி செய்கிறது. பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது. ஊட்டச்சத்து உறிஞ்சதலை அதிகரிக்கிறது. இந்த நானோ ஜிங் மற்றும் காப்பர் திரவ உரங்களை, ஒரு மில்லி ஒரு லிட்டர் வீதம், ஏக்கருக்கு 100 மில்லி, இலை வழியாக அல்லது சொட்டு நீர் பாசனம் மூலம் பயன் படுத்தலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## ஊட்டச்சத்து பானங்கள்

**தர்பூசணி சாறு**

**தேவையான பொருட்கள்**

தர்பூசணி – 1 கப் (துண்டுகளாக்கப்பட்டது)

புதினா இலைகள் – சிறிதளவு (அலங்கரிக்க)

**செய்முறை**

1.தர்பூசணி துண்டுகளை மிக்ஸியில் போட்டு அரைக்கவும் (தண்ணீர் சேர்க்கத் தேவையில்லை).

2.விருப்பப்பட்டால் சர்க்கரை சேர்த்து கலக்கவும்.

3.வடிகட்டி அல்லது வடிகட்டாமல் பரிமாறலாம்.

4.புதினா இலைகளால் அலங்கரிக்கவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# தாவரவழிப் பொருட்களைக் கொண்டு பயிர்களில் பூச்சி நோய் கட்டுப்பாடு முறைகள் குறித்த பயிற்சி



ஈரோடு, ஜுன் 22

ஈரோடு மாவட்டம், சென்னிமலை வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் முகாசி பிடாரியூர் கிராமத்தில் தாவர வழிப் பொருட்களைக் கொண்டு பயிர்களில் பூச்சி நோய் கட்டுப்பாடு முறைகள் குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இது குறித்து சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) சசிகலா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது, தற்போது விவசாயிகள் அதிகளவு பூச்சிக்கொல்லி, களைக் கொல்லி மருந்துகள் மற்றும் அதிகமான செயற்கை உரங்களை பயன் படுத்துவதால் மண்வளம் கெடுவதோடு விளைச்சல் குறைவதற்கு காரணமாகிறது. எனவே விளை நிலம் காப்போம் விழிப்புணர்வு மற்றும் இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு செய்வது குறித்த விவசாயிகள் விழிப்புணர்வு பயிற்சி அனைத்து கிராமங்களிலும் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சியில் ஜான் பிரபாகரன், மைராடா வேளாண்மை அறிவியல் நிலையம், கோபி, பேசும் பொழுது மண்ணில் உள்ள சத்துக்களை அறிய மண் மாதிரி எடுப்பதன் முக்கியத்துவம், ரசாயன உரம் பயன்பாட்டை குறைப்பது குறித்தும், பசுந்தாள் உரங்கள், உயிர் உரங்கள், உயிர் பூஞ்சான கொல்லிகள் மற்றும் இயற்கை வழி இடுபொருட்களை தயாரித்து பயன்படுத்துவது குறித்து தெளி வாக எடுத்துக் கூறினார். மேலும். எருக்கு, நொச்சி, வேம்பு, கரு ஊமத்தை, ஆடாதொடை. போன்ற தாவர பொருட்களைக் கொண்டு பூச்சிக்கொல்லி தயாரிப்பது குறித்து தெளிவாக எடுத்துக் கூறினார். வேளாண்மை உதவிக்கு இயக்குநர் (பொ) சசிகலா பேசும் பொழுது நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள் குறித்தும் பசுந்தாள் உரங்கள், உயிர் உரங்கள் ஆகியவை மானியத்தில் வழங்கப்படுவதாக தெரிவித்தார். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மோகனசுந்தரம், பேசும் பொழுது உழவர் செயலி, e-NAM போன்ற பல்வேறு செயலிகளை பயன்படுத்தும் முறைகள் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் 40க்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் வேலுமணி, உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேஸ்வரி ஆகியோர் செய்து இருந்தனர்.

# காளான் உற்பத்தி குறித்த விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா



அரியலூர், ஜுன் 22

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அட்மா திட்டத்தின்கீழ் உணவுக் காளான் உற்பத்தி குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா உடையார்பாளையம் கிராமத்தில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பொ மகேந்திர வர்மன் தலைமையில் நடைபெற்றது.

உடையார்பாளையம் கிராமத்தில் கடந்த 7 ஆண்டுகளாக காளான் வளர்ப்பினை வெற்றிகரமாக மேற்கொண்டு வரும் தொழில்முனைவோர் சுஜாதா, காளான் உற்பத்தி பண்ணையை விளையாட்டுகள் பார்வையிட்டு காளான் வளர்ப்பு முறைகள் குறித்து தெரிந்து கொண்டனர். சுஜாதா பேசுகையில் காளான் வளர்க்க தேவைப்படும் மூலப்பொருட்கள் கிடைக்கும் இடம், விலை விபரங்கள், வைக்கோல் பை தயார் செய்து காளான் வித்துக்கள் இடும் முறை, அறையின் வெப்பநிலை பராமரிப்பு, அறுவடை ஆகிய தொழில்நுட்பங்களை விளக்கி செயல் விளக்கம் செய்து காட்டினார். அங்கு அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு முறைகள் மற்றும் விற்பனை வாய்ப்புகள் குறித்து கேட்டறிந்தனர். இத்துடன் விளைநிலம் காப்போம் இயக்க விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி மண் ஆய்வு செய்து தேவையான அளவு உரங்களை இட்டு மண் வளத்தைப் பாதுகாத்தல், பாரம்பரிய நெல் சாகுபடி முறைகள் மற்றும் விவசாயிகள் அடையாள எண் பெறுவதன் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

இக்கண்டுணர் சுற்றுலாவில் வளவனேரி, இளமங்கலம் மற்றும் ஜெயங்கொண்டம் கிராம விவசாயிகள் பண்ணை மகளிர் கலந்து கொண்டனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# பருத்தியில் கூன்வண்டு தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள்

பருத்தி தண்டு கூன்வண்டு (பெம்பெருலஸ்அபினிஸ்) என்பது பருத்திப் பயிரைத் தாக்கி 50 முதல் 60 சதவீதம் வரை கடுமையான மகசூல் இழப்பைஏற்படுத்தும் ஒரு முக்கியப் பூச்சி-யாகும். 3-5 மி.மீ. அளவில் கறுப்பு நிறத்தில் இருக்கும் இக்கூன் வண்டு பருத்திச் செடியின் இளம்பருவத்தில் தண்டுப் பகுதியில் முட்டையிடுகின்றன. தண்டுப்பாகத்தின் உட்பகுதியில் புழு தின்று வளர்வதால் தரை மட்டத்திற்கு மேல் உள்ள தண்டுப்பாகம் வீங்க ஆரம்பிக்கிறது. இதனால் செடிகளின் வளர்ச்சி குன்றி காய்ந்து விடுகின்றன. மேலும் வீங்கிய பகுதி வலுவிழந்து பலமான காற்று வீசும் போதும் மண் அணைப்பு செய்யும் போதும் ஒடிந்து விடும். பருத்தி நட்டு 30-40 நாட்களுக்குள் தாக்கப்பட்டால் அந்த செடிகள் இறந்து விடும். பாதிக்கப்பட்ட செடிகளின் காய்பிடிப்பு பாதிக்கப்பட்டு மகசூல் இழப்பு ஏற்படும்.



## கூன்வண்டின் வாழ்க்கை சுழற்சி

கூன்வண்டுகள் ஒரு செடிக்கு 7 முதல் 8 முட்டைகள் வீதம் 120 முட்டைகள் வரை இடுகின்றன. பத்து நாட்களில் வெளிவரும் புழுக்கள் இரண்டு மாத காலம் வரை தண்டினுள் வளரும். இறுதியில் 10 நாட்களுக்கு கூட்டுப் புழுக்களாக இருந்துவிட்டு தாய் வண்டாக வெளிவருகின்றன. பருத்தியின் 6-7 மாத பருவ காலத்தில் 3 தலைமுறைகள் வரை உற்பத்தியாகிப் பெருகு கின்றன.

## பருத்தி தண்டு கூன்வண்டு தாக்குதலின்அறிகுறிகள்

● இளம் மற்றும் நடுத்தர வயது பருத்திச் செடிகளில் அதிகம் தாக்கும்.

● கூன்வண்டின் பெண் பூச்சிகள் பருத்தி தண்டினை சற்று துளைத்து முட்டையிடும். முட்டையில் இருந்து வெளியே வரும் இளம் புழுக்கள் தண்டின் உட்புற திசுக்களை சேதப்படுத்துவதால், செடிகளின் வளர்ச்சி குன்றிவாடி விடும். புழுக்கள் தண்டின் உள்ளே சென்று சுரங்கம் போல தின்று சேதப்படுத்தும். இளம் பருத்திச் செடிகள் திடீரென வாடிக் காய்ந்து விடும்.

● தாக்கப்பட்ட தண்டில் முடிச்சு அல்லது வீக்கம் போன்ற தோற்றம் காணப்படும். நில மட்டத்திற்குச் சற்று மேலே செடியின் அடித்தண்டுகளில் முண்டுகள் போன்ற வீக்கம் காணப்படும்.

● புழுக்கள் உள்ளே குடைவதால் தண்டு வலுவிழந்து, மெல்லிய காற்று வீசினாலும் செடிகள் எளிதில் முறிந்து விழுந்து விடும்.

● தாக்கப்பட்ட செடிகளில் காய்களின் எண்ணிக்கையும் அதன் தரமும் மிகக்கடுமையாகக் குறையும்.

**பருத்தியில் கூன்வண்டு பாதிப்பிலிருந்து பயிர்களை காத்திட ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகள்**

● தாக்கப்பட்ட தண்டுகள் மற்றும் செடிகளை பிடுங்கி அழிக்கவும்.

● அறுவடைக்குப் பிறகு பயிர் கழிவுகளை வயலில் விடாமல் அகற்றவும்.

● பயிர் சுழற்சி கடைப்பிடிக்கவும்.

● வயலை களையின்றி சுத்தமாக வைத்திருக்கவும்.

● வாரத்திற்கு ஒரு முறை வயலைச் சுற்றிப் பார்த்து தண்டில் துளை, வீக்கம், வாடுதல் போன்ற அறிகுறிகள் உள்ளதா என கண்காணிக்கவும்.

● அடி உரமாக தொழு எருவை எக்டருக்கு 25 டன் அல்லது வேப்பம் புண்ணாக்கு 250 கிலோவை தூவ வேண்டும்.

● குளோர்பைரிஃபாஸ் 20 ஈசி மருந்து கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

● நடவு செய்த 20 நாட்கள் கழித்து தூரைச்சுற்றி மண் அணைக்க வேண்டும்.

● விதைத்த 20-ஆம் நாளில் ஏக்கருக்கு 10 கிலோ கார்போபியூரான் 3% குருணை மருந்துடன் 40 கிலோ மணல் கலந்து செடியின் தூர் பகுதியில் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.



● தாக்குதல் அதிகமாக இருந்தால், ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி. பிப்ரோனில் அல்லது 2.5 மி.லி. குளோர்பைரிபாஸ் கலந்து, மண் ஈரமாக இருக்கும் போது தண்டினைச் சுற்றி தூர்பகுதி நனையுமாறு ஊற்ற வேண்டும்.

● இமிடாக்ளோப்ரிட் 17.8 SL @ 0.3 மில்லி / லிட்டர் தண்ணீர் அல்லது குளோரான்ட்ரனிலிப்ரோல் 18.5 SC @ 0.3 மி.லி. / லிட்டர் தண்ணீர் அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 5 SG @ 0.4 கிராம்/லிட்டர் தண்ணீர் தியாமெத்தோக்ஸாம் 25 WG @ 0.2 கிராம் / லிட்டர் தண்ணீர் கலந்து தண்டுப்பகுதியில் நன்கு நனையுமாறு தெளிக்கவும். தண்டு கூன்வண்டின் புழு தண்டின் உள்ளே இருப்பதால், பாதிக்கப்பட்ட செடிகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து அகற்றுவது மிகவும் பயனுள்ள கட்டுப்பாட்டு முறையாகும்.

தகவல் : *கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். 82480 80922.*

# அதிக இலாபம் தரும் கால்நடை வளர்ப்பு பயிற்சி



திருச்சி, ஜுன் 22

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், நவீன தொழில்நுட்பங்கள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, லாபம் தரும் கால்நடை வளர்ப்பு பற்றிய நிலையப் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி, துவக்கி வைத்து ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கிய அங்கமாகவிளங்கும் கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். பெட்டவாய்த்தலை கால்நடை உதவி மருத்துவர் ஹரீஷ், அதிக லாபம் ஈட்டும் துறையான கால்நடை வளர்ப்பில் கால்நடை இனங்களைத் தேர்வு செய்தல், கால்நடை பராமரிப்பு, கொட்டகை

அமைத்தல், தீவன மேலாண்மை, நோய் பராமரிப்பு, செயற்கை கருவூட்டல், பால் உற்பத்தி போன்ற தலைப்புகளில் தொழில்நுட்ப உரை வழங்கினார்.

இணைப்பேராசிரியர் முனைவர் ராதிகா, தீவனப் பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விவரித்தார். இணைப்பேராசிரியர் முனைவர் மு.சகிலா இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட தோடு கால்நடை பராமரிப்புக்கு ஏற்ற தீவனப் பயிர் வகைகள் குறித்து விளக்கினார். இப்பயிற்சியில் திருச்சி மாவட்டத்தின் பல்வேறு வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# மண்ணில் கரிம சத்து அதிகரித்தால் என்ன நடக்கும் தெரியுமா?



நம்முடைய முன்னோர்கள் காலத்தில் அள்ளி அள்ளிக் கொடுத்த நிலம் இன்று மகசூலை கிள்ளி கிள்ளி கொடுக்கிறது. நாம் செலவு செய்த காசு கூட திரும்பி வரலே.' உழவன் கணக்கு பார்த்தால் உழுக்கு கூட மிஞ்சாது என்பது போல தான்.

**இதற்கு யார் காரணம் பயிரா? நிலமா? அல்லது உரமா?**

இல்லை மண்ணில் உள்ள கரிம சத்துகள் (ORGANIC MATTER/ CARBON) படிப்படியாக குறைந்தது தான் காரணம். நம்முடைய முன்னோர்கள் கண்ட கண்ட உரங்களை போட வில்லை. அழுது கிட்டே இருந்தாலும்கூட உழுது கிட்டே இருப் பாங்க. அதுமட்டுமல்ல தொழு உரம், ஆட்டு கிடை, மாட்டு கிடை போடுவாங்க. மண்ணில் காற்றோட்ட வசதியும் நுண்ணுயிர் பெருக்கமும் அதிகமாக இருந்தால் தான் அன்று நிலங்கள் மகசூலை அள்ளி தந்தன. இன்று சரிவர உரமிடதாலும் உழவு போடாமல் மண்ணை மலடாக்காக்கி கரிம சத்தை படிப்படியாக இழந்ததன் விளைவாக இன்று மகசூலை கிள்ளி கொடுக் கின்றன. அன்று மண்ணுக்கு உரமிட்டோம். ஆனால் பயிருக்கு இடவில்லை. ஆனால் இன்று மண்ணுக்கு இடாமல் பயிருக்கு தான் இடுகிறோம். அதனுடைய விளைவு தான் இது.

**கரிம சத்துகள்**

இவை தான் மண்ணின் வளத்தையும் உயிர்ம தன்மையும் உற்பத்தியையும் அதிகரிக்க காரணமாக இருப்பது கரிம சத்துகள் @ அங்கக சத்துகள் தான்.

**இது மண்ணில் எவ்வளவு இருக்க வேண்டும் தெரியுமா?**

1.0%க்கு மேல் 2% வரை இருக்கலாம். ஆனால் இன்றைய நிலையில் பல விவசாய நிலங்களில் 0.3% முதல் 0.7% வரை மட்டுமே உள்ளதாக மண்பரிசோதனை ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

**கரிம கார்பன் அதிகரிக்க என்ன வழிகள்?**

1) பயிர் கழிவுகளை தீயிட்டு எரிக்காமல், மண்ணில் ரோட்வோட்டர் போட்டு மடக்கி நன்றாக மண்ணோடு கலக்க வேண்டும். இவை மக்கி மண்வளத்தை அதிகரிக்கும்.

**2) நன்கு மக்கிய தொழு உரம் (FYM)**

மண்புழு உரம் கிடை அமர்த்துதல் போன்ற கழிவுகளை மண்ணில் இடவேண்டும்.

3) 7 உழவு போட்டால் எரு போட வேண்டிய தில்லை என்பது பழ மொழி கோடையிலிந்து சாகுபடி தொடங்கும் வரை மண்ணை கிளறி பொலபொலப்பாகவும் காற்றோட்ட வசதி உள்ளதாகவும் மாற்ற வேண்டும்.

4) வெயில் காலங்களில் மூடாக்கு போடுதல், பல தானிய விதைப்பு போன்றவற்றை செய்தால் மண் ஊட்டம் பெறும்.

5) ஜீவாமிர்த கரைசல் மீன் அமில கரைசல் பயன்படுத்தி நுண்ணுயிர் பெருக்கத்தை அதிகரிக்க வேண்டும்.

6) பசுந்தாள், தழை உரங்களை போட்டு மடக்கி உழவு போடுதல்.

7) உயிர் உரங்களை அதிகமாக பயன்படுத்துதல்.

இவ்வாறாக மண்ணில் சேர்க்கும் ஒவ்வொரு 1% ஆர்கானிக் கார்பன் சத்துகள் நாளைய விளைச்சலுக்கான முதலீடு ஆகும்.

**மண்ணில் கார்பன் அளவு அதிகரித்தால் என்ன நடக்கும்?**

1) நீர்பிடிப்பு திறன் அதிகரிக்கும்

2) நுண்ணுயிர் பெருக்கம் அதிகரிக்கும்

3) மண்ணில் உள்ள சத்துகளின் விரயம் தடுக்கப்படும்

4) பயிர்களின் வேர் வளர்ச்சி துரிதமாகும்

5) வறட்சி வெப்பம் தாங்கும் திறன் உண்டாகும்

மண்ணில் கார்பன் அளவு அதிகரித்தால் விளைச்சல் மட்டுமல்ல மண்வளமும் விவசாயிகளின் வாழ்க்கை தரமும் உயரும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பனையில் உப பொருட்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் பயிற்சி



சேலம், ஜூன் 22

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், கடத்தூர் அக்ரஹாரம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் பனையில் உப பொருட்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் பயிற்சி நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி தலைமை தாங்கி விவசாயிகளுக்கு மண் பரிசோதனை, மண் வள அட்டைகள், இயற்கை விவசாயம், உரங்களின் சமச்சீரான பயன்பாடு மற்றும் நீர் சேமிப்பு நுட்பங்கள், பசுந்தாள் உரம் இடுதல் மற்றும் விவசாய அடையாள எண் பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

தோட்டக்கலை துணை இயக்குனர் மஞ்சுளா சிறப்பு அழைப் பாளராக கலந்து கொண்டு பி.எம் கிஸான் கவுர நிதி 23 வது தவணை பாரத பிரதமர் துவக்கி வைப்பது குறித்தும், தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தும் மானிய திட்டங்கள் குறித்தும் எடுத்து கூறினார். பனையில் இருந்து பதநீர், நுங்கு, பனம் பழம், பனங்கிழங்கு, பனங்கருப்பட்டி, சில்லுக் கருப்பட்டி, பனை ஓலை, பனை நார், பதநீர் ஆகிய உப பொருட்கள் பற்றியும் பனங் கற்கண்டு, கருப்பட்டி, பனைசர்க்கரை, பனங்கிழங்கு மாவு பனங் கிழங்கு இனிப்புகள் ஆகிய மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் காட்சி படுத்தப்பட்டும் அதன் விவரங்கள் பற்றியும் எடுத்து கூறப்பட்டது.

ஓய்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் கே.பழனிசாமி சிறப்பு பயிற்சியாளராக கலந்து கொண்டு பயிற்சி அளித்தார். கலந்து கொண்ட 40 விவசாயிகளுக்கு பயிற்சி ஊக்கதொகை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

தோட்டக்கலை உதவி இயக்குனர் இராதா சுந்தராஜன், வேளாண்மை அலுவலர் த.நிவேதா ஸ்ரீ, துணை தோட்டக்கலை அலுவலர் மா.சசிகுமார், வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பயிர்கள் வறட்சியை தாங்க இளஞ்சிவப்பு நிறமுடைய பேகல்டேடிவ் மெத்திலோ பாக்டர்



இராணிப்பேட்டை , ஜுன் 22

பயிர்கள் வறட்சியை தாங்க, இளஞ்சிவப்பு நிறமுடைய பேகல்டேடிவ் மெத்திலோ பாக்டர் அவசியமாகும். இதன் பயன்கள் மற்றும் பயன் படுத்தும் முறைகள் குறித்து, இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கா.சண்முகம் விவசாயி களுக்கு பின் வருமாறு தெரிவித்துள்ளார்.

இளஞ்சிவப்பு நிறமுடைய பேகல்டேடிவ் மெத்திலோ பாக்டர் (சுருக்கமாக பி.பி.எப்.எம்) எனும் பாக்டீரியா சிறந்த உயிர் உரம் ஆகும். இது பயிர்களை வறட்சி தாங்கி வளர உதவுகின்றது. விதை நேர்த்தி செய்ய 1% கரைசலை தயாரித்து 10-15 நிமிடம் ஊற வைத்த பின் விதைப்பதன் மூலம் விதைகள் அதிக முளைப்புத்திறன் கொண்டதாக இருக்கின்றது. நாற்றுகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது. இலைத்தாளின் பரப்பை அதிகரிப்பதுடன் பச்சையத்தின் அளவையும் கூட செய்கின்றது. பூக்கள், கனிகள், விதைகள் விரைவில் நல்ல தரத்துடன் முதிர்ச்சியடைய செய்கின்றது. எனவே, 10% வரை கூடுதல் மகசூல் பெற வழி செய்கின்றது. நெல் நடவு செய்த 10 நாட்கள் கழித்து 1% கரைசல் (10 மில்லி பி.பி.எப்.எம்/ஒரு லிட்டர் தண்ணீர்) என்ற வகையில் கலந்து அதிகாலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும். 30 நாட்கள் இடைவெளி விட்டு மீண்டும் தெளிக்கலாம். அனைத்து பயிர்களுக்கும் இந்த திரவ உயிர் உரம் முக்கிய தருணங்களான பூப்பிடித்தல், தூர்கட்டுதல், கனி உருவாதல் தருணங்களில் பயன் படுத்தலாம். இந்த உயிர் உரத்தை பூச்சிக்கொல்லி, பூஞ்சாணக்கொல்லி உடன் கலந்து பயன் படுத்தக்கூடாது என்பதை முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும். விதை நேர்த்திக்கு 5 கிலோ விதைக்கு 200 மில்லி, அடியுரமாக இட 2 லிட்டர், இலை வழி தெளிக்க 200 லிட்டர் தண்ணீருக்கு 2 லிட்டர் பி.பி.எப்.எம் என்ற வீதத்தில் பயன்படுத்துவது சிறந்த பலனை அளிக்கும்.

இந்த உயிர் உரம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வளைதளத்தில் டிஎன்ஏயு அக்ரிகார்ட்.காம் என்ற வலைதளத்தில் லிட்டர் ரூ.413 க்கு கிடைக்கின்றது. விவசாயிகள் ஆன்லைனில் நேரடியாக கொள்முதல் செய்து கொள்ளலாம். எனவே, வறட்சியை 7 முதல் 10 நாட்கள் வரை தாங்கவும், கூடுதல் மகசூல் பெறவும் இந்த பி.பி.எப்.எம் என்ற உயிர் உரத்தை விவசாயிகள் தவறாது பயன்படுத்தி குறைந்த செலவில் கூடுதல் மகசூல் பெற வேண்டும் என காவேரிப்பாக்கம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சண்முகம் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

# மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது

மதுரை, ஜுன் 22

12-வது சர்வதேச யோகா தினம் ஜுன் 21 அன்று மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் சமுதாய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை இணைந்து கல்லூரி வளாக மைதானத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த முனைவர் சந்திரமணி, முதல்வர், மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இந்தஆண்டிற்கான "ஆரோக்கியமான முதுமைக்கான யோகா" என்ற கருப்பொருளின் முக்கியத்துவத்தையும், யோகாவின் அவசியத்தையும் எடுத்துரைத்தார். மாணவர்கள் தினமும் யோகா பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் உடல், மனம் மற்றும் ஆன்ம நலனை மேம்படுத்திக் கொள்ளலாம் என்று வலியுறுத்தினார்.

செயல் அலுவலர், உலக சமுதாய சேவா சங்கம், மதுரை சுருளிக்குமரன், பத்மாசனம், விருட்சாசனம், திரிகோணாசனம், புஜங்காசனம், வஜ்ராசனம் மற்றும் சவாசனம் உள்ளிட்ட பல்வேறு யோகாசனங்களை செய்முறை விளக்கத்துடன் எடுத்துக்காட்டினார். இதில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்று யோகாசனங்களை மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்களான முனைவர் சித்ரா, முனைவர் ஆரோக்கியமேரி மற்றும் முனைவர் வேணுதேவன் ஆகியோர் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தனர். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உற்சாகமாக பங்கேற்ற இந்நிகழ்ச்சி, ஆரோக்கியமான மற்றும் சமநிலையான வாழ்க்கைக்காக யோகாவை அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தப்பட்டது.

# மிளகாயில் மகசூல் அதிகரிக்க விதைப் பரிசோதனை அவசியம்

பணப் பயிர்களில் ஒன்றான மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகள் பெரும்பாலும் தங்களுக்கு தேவையான விதைகளை தாங்களே சாகுபடி செய்து சேமித்து வைத்து கொள்கிறார்கள்.

பயிரிடும் பயிரின் மகசூல் விதையின் தரத்தை பொறுத்தே அமையும். அதனால் நாம் தேர்ந்தெடுக்கும் விதையானது பாரம்பரியத் தூய்மை, பிற இனக்கலப்பில்லாததும், பிறப்பயிர் மற்றும் களை விதைகள் கலப்பு இன்றி அதிக சுத்தத் தன்மை உடையதும், அதிக முளைப்புத்திறனும் வீரியமும், நோய் தாக்காத விதைகளாகவும் இருக்க வேண்டும். மிளகாய் விதைப் பயிரானது பிற ரக வயல்களில் இருந்து குறைந்தது 200 மீட்டர் தூரம் தனிமைப் பட்டிருக்க வேண்டும். விதைக்காக அறுவடை செய்யும் போது காய்கள் நன்கு பழுத்து முழுவதும் சிவப்பு நிறமாக மாறிய பின்புதான் அறுவடை செய்ய வேண்டும்.

அப்போது தான் விதைகள் நன்கு முதிர்ச்சி அடைந்து நல்ல முளைப்பு மற்றும் வீரியத் திறனுடன் இருக்கும். மிளகாய்ப் பயிரில் அறுவடை ஒரே அறுவடையாக இல்லாமல் பல அறுவடைகளாக எடுப்பதால் அவற்றில் முதல் மற்றும் கடைசி ஓரிரு அறுவடைகளை தவிர்த்து இடைப்பட்ட அறுவடைகளில் இருந்து வரும் பழங்களில் இருந்து மட்டுமே விதைகள் எடுக்க வேண்டும்.

விதை உற்பத்தியில் எவ்வளவு கவனம் தேவையோ அதே அளவு கவனம் விதைகளை அடுத்த விதைப்பு பருவம் வரை சேமித்து வைப்பதிலும் தேவைப்படுகிறது. விதையின் ஈரப் பதத்தை பொறுத்து விதையின் தரம் மாறுபடுகிறது. விதையின் ஈரப்பதம் அதிகமாக இருந்தால் விதைகளின் முளைப்புத்திறன் குறைந்து மகசூல் இழப்பு ஏற்படும். குறைந்த கால சேமிப்புக்கு விதைகளை 7-8 சத ஈரப்பதத்திற்கு காய வைத்து துணிப்பைகளில் நிறைத்து சேமித்து வைக்கலாம். நீண்டகாலம் விதைகளை சேமிக்க விதைகளின் ஈரப்பதத்தை 6 சதவீதம் அளவிற்கு குறைத்து காற்றுபுகாத பாலித்தீன் பைகளில் சேமித்து வைக்கலாம்.

விதைகளின் முளைப்புத்திறனானது 60 சதவீதத்திற்கும் குறையாமல் இருக்க வேண்டும்.விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து சேமித்து வைப்பது நல்லது. விதைப் பரிசோதனை செய்ய 10 கிராம் மிளகாய் விதைகளை உரிய விபரங்களுடன் பரமக்குடி ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- கட்டணமாக செலுத்தி விதை பரிசோதனை செய்து கொள்ளலாம் என விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் ச.முருகேஸ்வரி மற்றும் ப.வீரபாண்டியன் ஆகியோர் தெரிவித்துக் கொண்டனர்.



# விதை பரிசோதனை செய்து தரமான விதைகளைப் பயன்படுத்துங்கள்!

வரவிருக்கும் சாகுபடி பருவத்தை முன்னிட்டு, விவசாயிகள் தரமான மற்றும் சான்றளிக்கப்பட்ட விதைகளைத் தேர்வு செய்து விதை பரிசோதனை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என வேளாண் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

விதை பரிசோதனை மூலம் விதையின் முளைப்புத் திறன், தூய்மை, ஈரப்பத அளவு மற்றும் பிற பயிர் விதைகள் அல்லது களைகளின் கலப்பு போன்ற தரக்கூறுகள் அறிவியல் முறையில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இதன் மூலம் தரமற்ற விதைகளைத் தவிர்த்து, அதிக மகசூல் பெறக்கூடிய தரமான விதைகளை விவசாயிகள் பயன்படுத்த முடியும்.

விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதை மாதிரிகளை அங்கீகரிக்கப்பட்ட விதை பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். விதைப்பு செய்வதற்கு முன்பாகவே விதைகளின் தரத்தை உறுதி செய்வது அவசியம்.

**விவசாயிகளுக்கான முக்கிய ஆலோசனைகள்**

– சான்றளிக்கப்பட்ட மற்றும் தரமான விதைகளை மட்டுமே வாங்கி பயன்படுத்த வேண்டும்.

– விதைப்பதற்கு முன் விதை பரிசோதனை செய்து முளைப்புத் திறனை உறுதி செய்ய வேண்டும்.

– விதை மாதிரிகளை முறையாக சேகரித்து அங்கீகரிக்கப்பட்ட விதை பரிசோதனை நிலையங்களில் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும்.

– பரிந்துரைக்கப்பட்ட விதை நேர்த்தி முறைகளை பின்பற்ற வேண்டும்.

– விதைகளை ஈரப்பதம் இல்லாத, குளிர்ச்சியான மற்றும் பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்க வேண்டும்.

– விதை கொள்முதல் செய்ததற்கான ரசீதுகள் மற்றும் விதை மூட்டைகளின் அடையாள விவரங்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

தரமான விதைகளின் பயன்பாடும், விதை பரிசோதனையும் அதிக மகசூல் மற்றும் நிலையான வேளாண் உற்பத்திக்கு அடிப்படையாகும் என திருவள்ளூர், விதைபரிசோதனை நிலைய மூத்த வேளாண் அதிகாரி ராஜேஷ் அறிவுறுத்தினார்.

# பிரதம மந்திரியின் நிதி வழங்கும் விழா மற்றும் உரங்களின் சமச்சீர் பயன்பாடு பற்றிய பயிற்சி



கடலூர், ஜூன் 22

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலத்தில், 20.6.26 அன்று பிரதம மந்திரியின் 23 வது சம்மன் நிதி துவக்க விழா மற்றும் உரங்களின் சமச்சீர் பயன்பாடு பற்றிய பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சியில் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், பிரதம மந்திரியின் பயிர் காப்பிட்டு திட்டம், நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளையும் பற்றி விரிவாக விளக்கினார். நமது பாரத பிரதமரின் 23-வது தவணையினை அனைத்து விவசாயிகளுக்கும் நேரடி உரைை யகாணோலி மூலம் காண்பிக்கப்பட்டது. மேலும் முனைவர் க.கலைச்செல்வி (உழவியல் துறை), உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் உள்ள பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண் வளஅட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். மேலும் இப்கோ உர நிறுவன வட்டார தலைவர், கலந்துக் கொண்டு தங்களது இப்கோ டி.ஏ.பி பற்றியும் நுண்ணூட்ட கலவை, இயற்கை வேளாண்மையில் நெல்லிற்கு இலைவழி தெளிப்பாக பொட்டாஷ் பயன்படுத்தும் முறை பற்றி தெளிவாக விளக்கினார். இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய முனைவர். கூ.சு ஜெய்வேலு கலந்துக் கொண்டு, தொழில்நுட்ப உரை வழங்கினார். மேலும் இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

# பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி ஒளிபரப்பு மற்றும் கருத்துக் காட்சி



திருச்சி, ஜூன் 22

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், நவீன தொழில் நுட்பங்கள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதியின் 23 வது தவணை வெளியீடு நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் குறித்து விவரித்தார். திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) இர. ஜெயராணி நிகழ்ச்சியை துவக்கி வைத்து பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி திட்டத்தின் நன்மைகள், இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விவசாயிகள் செய்ய வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்கினார்.

வேளாண் அறிவியல் நிலைய இணைப்பேராசிரியர் முனைவர் சகிலா தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலம் வெளியிடப்பட்ட நவீன ரகங்கள் குறித்து எடுத்துரைத்தார். முனைவர் ராதிகா விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றி தொழில்நுட்ப உரை வழங்கினார். முனைவர் மாரிமுத்து இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். மேலும், வேளாண்மை அறிவியல் நிலைய வளாகத்தில் நவீன இரகங்கள், உயிர் உரங்கள், இயற்கை இடுபொருட்கள், பயிர் ஊக்கிகள், பசுந்தாள் உரப்பயிர்கள் குறித்த கருத்துக்காட்சி காட்சிப்படுத்தப்பட்டது. இதில் திருச்சி மாவட்டத்தின் பல்வேறு வட்டாரங்களை சேர்ந்த 120க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்குபெற்று பயனடைந்தனர்.

# Rithvik Pipe

IS 4985 : 2021 IS 8537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நெற்பயிரில் இயற்கை சூழல் முறை பண்ணைப்பள்ளி பயிற்சி



சிவகங்கை, ஜூன் 22

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி வட்டாரத்தில் வேளாண்மைத் துறை அட்மா மாநில விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மீனாப்பூர் கிராமத்தில் நெற் பயிரில் இயற்கை சூழல் முறையில் பண்ணைப்பள்ளி பயிற்சி வேளாண்மை துணை இயக்குநர் (உ.ப.நி) செல்வம், தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் வேளாண்மை துணை இயக்குநர் ( உ.ப.நி ) வேளாண்மை சார்ந்த திட்டங்களான விளைநிலங்களை காப்போம் இயக்கம் பற்றியும், ஒருங்கிணைந்த பயிர் பாது காப்பின் அம்சமாக பூச்சிக்கொல்லிகளை அதிகம் தெளிப்பதால் நன்மை செய்யும் பூச்சிகளான குளவிகள், தட்டான், பொறி வண்டு, சிலந்திகள் பாதிக்கப்படும் எனவும் மேலும் நன்மை செய்யும் பூச்சிகளைவிட தீமை செய்யும் பூச்சிகள் பொருளாதார சேத நிலைக்கு அதிகமாக இருக்கும் போது மட்டுமே ரசாயன பூச்சிக்கொல்லிகள் தெளிக்க அறிவுரைகள் வழங்கினார். வேளாண்மை அறிவியல் நிலையம் குன்றக்குடி உதவி பேரராசியர் முனைவர் பிரபு நெல் ரகத் தேர்வு, விதை நேர்த்தி, விதையை கடினப்படுத்துதல், சமச்சீர் உர மேலாண்மை பற்றி எடுத்துரைத்தார்.

வேளாண்மை அலுவலர் சிவபிரிய தர்ஷினி வேளாண்மைத் துறையின் மூலம் விநியோகிக்கப்படும் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டிரியா, திரவ பொட்டாஷ் இவைகளை பயன்படுத்தி அனைத்து பயிர்களுக்கும் விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

மேலும் துணை வேளாண்மை அலுவலர் மனோஜ்குமார் மண் மாதிரி சேகரித்தல் முறைகள், விவசாய அடையாள எண் பதிவு, விதை நெல் ரகத் தேர்வு மற்றும் வேளாண் திட்டங்களை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சூர்யா, கலந்து கொண்ட பண்ணைப் பள்ளி விவசாயி களை நன்மை செய்யும் பூச்சிகளை பெயர்களை வைத்து ஐந்து குழுக்களாக பிரிந்து ஒவ்வொரு குழுக்களும் வயல்வெளியில் அவர்களே பூச்சிகளை இனம் கண்டறிந்து சேகரித்து வந்து பின்னர்

வரைபடமாக வரைந்து நன்மை செய்யும் பூச்சிகள் தீமை செய்யும் பூச்சிகள் எதுவென்று கண்டறிந்து அனைத்து விவசாயிகள் முன்னிலையில் விளக்கமாக கூற வேண்டும் என்றும் மற்றும் அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஸ்குமார், உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் கொண்டு விதை நேர்த்தியை செயல்விளக்கமாக செய்து காண்பித்தார். மேலும் இப்பயிற்சியில் கலந்து கொண்ட 25 விவசாயிகளுக்கு வேளாண்மை துணை இயக்குநர் (உ.ப.நி) மூலம் பண்ணைப் பள்ளி உயரியியல் கட்டுப்பாட்டு காரணிகள் வழங்கப்பட்டது.

# மலரியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு தோட்டக்கலை மாணவர்கள் கல்வி சுற்றுலாவிற்கு வருகை



கன்னியாகுமரி, ஜுன் 22

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் மலரியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 22.6.26 அன்று காலை 11.30 மணி அளவில் மாதவரம் தோட்டக்கலை கல்வி நிறுவனத்தின் சுமார் 45 தோட்டக்கலை மாணவர்கள் கல்வி சுற்றுலாவிற்காக வருகை தந்தனர். முனைவர் தி.ராஜ்பிரவின், இணைப் பேராசிரியர் (வேளாண்மை விரிவாக்கம்) வரவேற்புரை வழங்கினார். மலரியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் இரா.ஸ்வர்ணபிரியா மலரியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள் பற்றி விளக்கி கூறினார்.

பின்னர் மலரியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பண்ணையில் உள்ள பாரம்பரியமலர்களை கொண்டு உருவாக்கப்பட்ட குறிஞ்சி பல்லுயிர் பண்ணையில் புலவர் கபிலர், குறிப்பிட்ட மலர்கள் வளர்க்கப்பட்டு வருவதை மாணவர்கள் பார்வையிட்டனர். பா.கிருஷ்ணவேணி, தோட்டக்கலை அலுவலர் மற்றும் சே.மொய்தீன் கனி, உதவி தோட்டக்கலை அலுவலர், மாதவரம் தோட்டக் கல்வி நிறுவனம் ஆகியோர் இக்கல்வி சுற்றுலா–விற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396